# எட்டுத்தொகை இலக்கியங்களில் நெய்தல் நில மக்களின் தொழில் வாணிபம்

***ஜா. பீற்றர் ராஜ்***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 11904
காமராஜர் அரசு கலைக்கல்லூரி, சுரண்டை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி

***முனைவர் தா. திருநாவுக்கரசு***
காமராஜர் அரசு கலைக்கல்லூரி, சுரண்டை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6438

***ஆய்வுச் சுருக்கம்***

*இலக்கியங்கள் என்பது சமுதாய படைப்புகளில் ஒன்றாகும். அப்படிப்பட்ட இலக்கியங்களில் ஐந்திணைகளுள் ஒன்றான நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் கடல்சார் தொழிலை மேற்கொண்டனர். மீன்பிடித் தொழிலை தங்களது குலத்தொழிலாகக் கொண்டு அத்தொழிலை நம்பி தங்கள் வாழ்வாதாரங்களை அமைத்துக் கொண்டனர். மிகத் தொன்மையான நம்முடைய இலக்கியங்களின் மூலம் நெய்தல் நில மக்கள் வாழ்ந்த விதம், மீன்பிடித்தல், பெருந்தொழில், சிறுதொழில் மற்றும் வாணிபம் முறைகளை ஆராயும் விதத்தில் இவ்வாய்வு அமைகிறது.*

### ஆய்வு முன்னுரை

நெய்தல்நிலமக்கள்கடல்தொழிலையேநம்பிவாழ்ந்தனர். கடலின் ஓரத்தில் குடியிருப்புகள் அமைத்து கடலில் சென்று மீன் பிடித்தல் தொழில் மற்றும் உப்பு விளைவித்தல் போன்ற தொழில்களை செய்து அவற்றை விற்றும், வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்தும், அதனால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இந்நில மக்கள் தங்களது வாழ்க்கை பாதையை நிகழ்த்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நெய்தல் நில மக்களின் தொழில் முறைகளைப் பற்றியும் உள்நாட்டு, அயல்நாட்டு கடல்சார் வாணிபம் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### நெய்தல் - பெயர்க்காரணம்

நெய்தல் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளுள் ஒன்று. நிலத்தினைக் குறிப்பிடும் தன்மையிலும், கடலும் கடல் சார்ந்த பகுதியினைக் குறிக்கும் வகையிலும் பயன்படுத்தப் பெறுகின்றன. நெய்தல் நிலம் என்றாலே கடல் என்பது தான் அர்த்தம். நெய்தல் என்பது ஒரு தாவரத்தின் பெயர்.

மிகுதியான நீர் நிலைகள் கொண்ட இடங்களில் வளரும் தன்மை பெற்ற ஒரு வகை தாவரமாகும். இந்த நெய்தல் மலரானது நீலமணி போன்ற நிறமும் நீரின் அளவிற்கு ஏற்ப வளரும் தன்மையும் கொண்டது. இதன் சிறப்பினை அடிப்படையாகக் கொண்டே நெய்தல் திணை என்று பெயரிட்டுள்ளனர்.

## பெருந் தொழில்கள்

நெய்தல் நில மக்கள் பெருந் தொழில்களாக மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், உலர் மீன் தயாரித்தல், உப்பு விற்பனை செய்தல், முத்தெடுத்தல் எனப் பல்வேறு கடல்சார் பெருந் தொழில்களை மேற்கொண்டுள்ளனர். மரக்கலன்கள் மூலமாக கடலுக்குச் சென்று வலைகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி மீன்களை பிடித்து அம்மீன்களை கரைக்கு கொண்டு வந்து, அவற்றை விற்று தங்களுடைய வாழ்வை அன்று முதல் இன்று வரைக்கும் நடத்துகின்றனர். அவ்வகையில் மீன்பிடித் தொழிலில் வல்லமை பெற்ற ஆண்களுக்கு தங்கள் பெண்களை திருமணம் செய்து கொடுத்துள்ளனர். மீன் பிடித்தொழிலுக்கென்று பல்வேறு வகையான கலன்களை இம்மக்கள் பயன்படுத்தியுள்ளனர். புணை, நாவாய், வங்கம், கலம், ஓடம், படகு, மதலை, மிதவை, தெப்பம், கைப்பரிசல், கப்பல், பாறு, சதா, ஆனம், படுவை எனப் பலவகையான கலன்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமாக திமில், அம்பி, தோணி என்ற மூன்று மரக்கலன்களை பயன்படுத்தியுள்ளதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவற்றில் திமில் என்ற கலன் பெரிதாக பயன்பட்டுள்ளதை எட்டுத்தொகை இலக்கியங்கள் சுட்டுகின்றன. கலம் என்பது நீண்ட தூரம் கடல் வாணிகத்திற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு நீருந்து ஆகும்.

**“யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியொடு பெயரும்”**

**(அகம்,பா.149)**

என்ற அகநானூற்றுப் பாடலின் மூலம் கடல் வாணிகத்திற்கு பயன்படுத்தப்பட்ட மரக்கலமானது அழகிய வேலைப்பாடுடன் யவனர்களால் செய்யப்பட்டுள்ளமையை உணர்த்துகிறது.

உப்பு விளைவிக்கும் தொழில் சிறப்பாக நெய்தல் நில மக்களிடையே காணப்பட்டுள்ளது. கடற்கரையின் ஓரத்தில் நீர்நிலைகளை வயல் போன்ற பரப்பில் இட்டு அதனை முறையாக பக்குவப்படுத்தி வெண்மையான கல் உப்பினை விளைவித்து அவற்றை மருத நிலங்களில் விற்று, அவற்றிற்கு பதிலாக நெல்லை இந்நில மக்கள் பெற்றனர் என்று இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வணிகம் செய்தவர்கள் உமணர்கள் எனப்பட்டனர். உப்பை விற்கும் பெண்கள் உமணத்தி என்றும் அழைக்கப்பட்டனர். வெண்கல் உப்பை தயாரித்து அவற்றை சகடங்கள் என்று சொல்லப்படுகின்ற மாட்டு வண்டிகளில் வெண்கல் உப்பை ஏற்றி மருத நிலத்தில் சென்று தந்தையும் மகளுமாக உப்பு வணிகம் செய்தனர் என்பதை,

**“உப்பொய் உமணர் அருந்துறை போக்கும்**
**ஒழுகை நோன் பகடு ஒப்ப குழீஇ”**

**(அகம்,பா.30)**

என்ற அகநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகிறது. மேலும்,

**“உவர்விளை உப்பின் உழாஅ உழவர்**
**ஓகை உமணர் வருபதம் நோக்கிக்**
**கானல் இட்ட காவற் குப்பை”**

**(நற்,பா.331)**

என்னும் நற்றிணை பாடல் வரிகளிலும் உமணர்கள் உப்பு விற்ற செய்திகளை அறிய முடிகிறது.

நெய்தல் நிலத்தின் முதன்மையான உணவுப் பொருள் மீன். அதுபோல மருத நிலத்தின் உணவுப் பொருளாக நெல் காணப்பட்டது. இவ்விரு நிலத்தாரும் தங்களுக்குள் ஒன்றை கொடுத்து ஒன்றை பெற்று பண்டமாற்று முறையில் பரிமாற்றம் செய்த தன்மையினை,

**“நெல்லின் நேரே வெண்கல் உப்பு**
**சேரி விலைமாறு கூறலின்”**

**(அகம்,பா.140)**

என்ற பாடலின் வழி உப்பிற்கு பதிலாக நெல்லை நெய்தல் நிலத்தவர்கள் பெற்றனர் என்பதை அறிய முடிகிறது.

**சிறு தொழில்கள்**

நெய்தல்நிலமக்களின்சிறுதொழில்களாக கொல்லர் தொழில், தச்சுத் தொழில், பொற்கொல்லர் தொழில், கால்நடை வளர்ப்பு தொழில், குடிசைகள் கட்டும் தொழில், பணியாளர் தொழில் என்று பலவகையான சிறு தொழில்கள் நெய்தல் நிலம் சார்ந்தவையாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. முக்கியமாக நெய்தல் நில மக்களின் மீன்பிடித் தொழிலுக்கு கொல்லரால் செய்யப்பட்ட இரும்பு பொருட்கள் பயன்படுகின்றன என்பதை,

***"கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறிஉளி***
***முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்***
***தாங்குஅரு நீர்ச்சுரத்து எறிந்து வாங்குவிசைக்***
***கொடுந்திமிர் பரதவர் கோட்டுமீன் எறிய"***

***(குறுந்,பா.304)***

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

கடலில் மீன் பிடித்தொழில் செய்கின்ற போது எதிர் வரும் சுறா மீன்களின் தலையை நோக்கி ஒரு உளியை எறிவர். அந்த உளியானது மிக கூர்மையாக காணப்படுவதாலும் மீன் பிடிப்பவர் மிக வேகமாக ஓங்கி எறிவதனாலும் சுறா மீனின் முகத்தில் ஆழமாக குத்தி விடும். பின்னர் அம்மீனை பெருங் கயிற்றால் இழுத்து கரைக்கு கொண்டு போய் சேர்ப்பார்கள். இதனால் ஏற்படும் சத்தத்தை கேட்டு கடலின் கரையில் இருக்கும் அன்னப் பறவைகள் பயந்து ஓடும். அவ்வாறு எறியப்படும் உளிக்கு எறிஉளி என்று பெயர் இதனை,

***"...... கூர்வாய் எறி உளி***
***முகம்பட மருத்த மளிவெதிர் நோன்காம்***
***தாங்கரு நீர் சுரந்து எறிந்து வாங்கு விசைக்***
***கொடுந் திமிற் பரதவர் கோட்டுமீன் எறிய***
***நெடுங்கரை இருந்த குறுங்கால் அன்னத்து***
***வெண் தோடு இரியும்"***

***(குறுந்,பா.304)***

என்ற குறுந்தொகை பாடல் வரிகளின் மூலம் மிக கூர்மையான எறிஉளி பற்றி அறிய முடிகிறது. மிக வலிமையான மீன்களான சுறா மற்றும் திமிங்கலம் போன்ற பெரிய பெரிய மீன்களை வீழ்த்துவதற்கு கொல்லனாற் செய்யப்பட்ட எறிஉளிகள் பயன்பட்டன என்பதை மிக தெளி வாக அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும் கடல், படகு, தோணி, உப்பு வணிகம் செய்வதற்காக வண்டிகள், மாணிழை என்ற இழைப்பு தொழிலால் செய்யப்பட்ட மிக நீண்டமான தேர் மற்றும் அத்தேரினை உறுதியான தன்மையோடு பிடித்து அமர்வதற்கு கைப்பிடிகள் ஆகியன தச்சு தொழில் செய்யும் தச்சர்களாலும் செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கன. நெய்தல் நில பெரியோர் பயணிக்கும் தேர்கள் பற்றி மிக சிறப்பாக இலக்கியம் குறிப்பிடுகின்றன.

***"கடல்பாடு அவிந்து,தோணி நீங்கி***
***நெடு நீர் இருங்கழிக் கடுமீன்***
***வெவ்வாய்ப் பெண்டிர் கெளவை தூற்றினும்***
***மாணிழை நெடுந்தேர்"***

***(அகம்,பா.50)***

என்ற அகநானூற்றுப் பாடலிலும்

***"கொடுஞ்சி நெடுந்தேர்"***

***(அகம்,பா.250)***

***"பொலம்படை பொலிந்த வெண்டேர்"***

***(குறுந்,பா.336)***

என்ற பாடலடிகளின் மூலமாக தேர்கள் எப்படிப்பட்ட சிறப்புடையன என்பதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. பொற்கொல்லர் தொழிலாக இரும்பு, மரம் போன்ற கடல்வாழ் மக்களுக்கு உதவும் கருவிகளையும் மனிதர்களுக்கும் குதிரைகளுக்கும் பொன்னாலான அணிகலன்களையும் தேர்களுக்கு அலங்காரம் செய்யப்பட்ட பொன் அணிகளையும் செய்து தரக்கூடியவர்களாக இருந்தனர். மேலும் நிலத்தில் கிடைக்கும் முத்து, சங்கு போன்ற பொருள்களிலும் அணிகலன்கள் செய்யக்கூடியவர்களாக இருந்தனர் என்பதை,

"மூரல் முறுவலள் பேர்வனள் நின்ற
சில்நிரை வால்வளைப் பொலிந்த"
(அகம்,பா.390)

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் உணர்த்துகிறது.

**உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வாணிபம்**

உள்நாட்டு வாணிபம் ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதிக்குள் நடைபெற்ற வணிக முறையினை குறிக்கும். பல்வேறு துறைமுகங்களுக்கிடையே பண்டமாற்று முறையில் உள்நாட்டு வணிகம் நடைபெற்றதையும் இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. அக்காலத்தில் நெய்தல் நிலத்தில் பெரும்பான்மை இவ்வணிகம் சார்பாக நடந்துள்ளது. இவ்வாறு உள்நாட்டு வணிகம் நடக்கின்ற இடத்திற்கு சந்தைகள், நாளங்காடிகள், அல்லங்காடிகள் என்று பெயரிட்டு அழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அயல் நாடுகளுக்கு மீன் மற்றும் விலையுயர்ந்த முத்துக்கள், சங்கு வளையல்கள், மீன் உணக்கல்(கருவாடு) போன்றவைகள் நெய்தல் நில மக்களின் மூலமாக ஏற்றுமதி செய்கின்றனர். வெளி நாட்டிலிருந்து இறக்குமதியான குதிரைகளை விற்பனை செய்ய ஈடுபட்ட செய்திகளும் அயல் நாடு களோடு நட்புறவு வைத்துள்ளதையும் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**ஆய்வு முடிவுரை**

நெய்தல் நில மக்கள் கடலும் கடல் சார்ந்த இடத்தில் கடலின் ஓரங்களில் வாழ்க்கையை நடத்தினர். கடலையே நம்பி கடல் தொழில் செய்தனர். கடலுக்கு சென்று மீன்பிடித்து அவற்றை விற்று தங்கள் வாழ்க்கையை நடத்தினர். அன்று முதல் இன்று வரைக்கும் இந்நில மக்கள் கடல் தொழிலையே தங்கள் குலத்தொழிலாக மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் உப்பு விளைவித்து அவற்றை விற்று அவற்றிற்கு பதிலாக நெல்லை பெற்றத் தன்மையையும் இலக்கியங்களின் வாயிலாக நெய்தல் நில மக்களின் வாழ்க்கை அடித்தளங்களை அறிந்து கொள்ள முடிகிறது. அக்காலத்தில் இருந்தே இந்நில மக்கள் பெருந்தொழில்களும் சிறுதொழில்களும் மற்றும் சங்குகள், முத்தெடுத்தல், வாணிபம் போன்ற பல்வேறு தொழில்களிலும் சிறப்புற்று வாழ்ந்தனர் என்பதை நம்முடைய தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகிறது.

**பார்வை நூல்கள்**

1. வி.நாகராஜன், குறுந்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை-600098, முதல் பதிப்பு ஏப்ரல் 2004
2. முனைவர் இரா.செயபால், அகநானூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை-600098, முதல் பதிப்பு ஏப்ரல் 2004
3. கு.வெ.பாலசுப்பிரமணியன், நற்றிணை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை-600098, முதல் பதிப்பு ஏப்ரல் 2004